**நீர் வளங்கள் சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளங்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்விற்காக பகிரங்கத் தொழிலில் ஈடுபடுகின்ற பட்டயக் கணக்காளர் கம்பனியொன்றின் உதவி என்னால் பெறப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்குரிய பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்லும் நிலையத்திற்குரிய வாடகைப் பணம் செலுத்தாமையின் காரணமாக | 2021 ஆம் ஆண்டின் போது இதற்காக நிகழத்தக்க பொறுப்புக்கள் காணப்படுமாயின் கணக்கீட்டு நியமத்தின் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச செயலாளரால் சபைக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்ட போதிலும், அந்த வழக்கின் மூலம் எழக்கூடிய நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட வழுக்களை திருத்துகின்ற போது முன்னைய ஆண்டின் இலாப மீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டில் கட்டிடங்களை பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 208,872 தொகையான செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 208,872 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூபா 13,261,884 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டு நீர் வளங்கள் சபைக்கு கையளிக்கப்பட்ட வடமத்திய பிரதேச அலுவலகத்தின் ஆய்வுகூட கட்டிடம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை மற்றும் குத்தகை அடிப்படையில் காணப்படுகின்ற சபைக்கு கையேற்காத காணிகளின் பல்வேறு மானியங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் கணக்கீட்டு கொள்கை சமர்ப்பிக்கும் போது இது | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

தொடர்பாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**1.5.3 அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரபலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விபரங்கள். | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரத்மலானை களஞ்சியத்தில் 03 வருடங்கள் முதல் பாவனைக்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்ட ரூபா 7,154,105 தொகையான 25 தண்ணீர் பம்பிகள், 10 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் மற்றும் அது தொடர்பான ஏனைய உபகரணங்கள் என்பன 2020 செப்டம்பர் 03 ஆம் திகதி நீரப்பாசன திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. உபகரணங்களை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு வழங்குவதற்கு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போதும், நீர் வழங்கள் சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போதும் இது தொடர்பாக தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டதுடன், அதன் கட்டளையின் பிரகாரம் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த உபகரணங்கள் நீர்ப்பாசன அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கட்டுப்பாட்டு சபை அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், எதிர்காலத்தில் மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உபகரணங்களை மிகவும் சரியான முறையில் நீர்ப்பாசன அமைச்சிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தேவையாயின் அந்த தகவல்களை சமர்ப்பிக்க முடியும். | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை அகற்றும் போது அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,683,106 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டதுடன், அதில் ரூபா 2,320,606 தொகையான கடன்பட்டோர் மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழையதாகும். | கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் சகல நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விட காலாவதியான ரூபா 2,320,606 தொகையான மீதி 02 அரச நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டியதாக காணப்பட்ட இக் கடன்பட்டோர் மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | கடன் மீதியை அறவிடுதல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் சேவை முற்பணமாக ரூபா 18,897,123 தொகை செலுத்தப்பட்ட போதிலும், அதில் ரூபா 1,116,328 தொகை உரிய சேவைகள் ஒரு வருடத்திற்கு அதிகாலம் முதல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சேவை முற்பண கணக்கில் ஒரு வருடத்தை விஞ்சி காணப்பட்ட ரூபா 1,116,328 தொகையான மீதி 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் ரூபா 379,592 வரை குறைவடைந்திருந்தது. 04 நிறுவனங்களில் காணப்படுகின்ற அந்த மீதியையும் தீர்த்து வைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | உரிய பணிகளை பூர்த்தி செய்து முற்பணங்களை வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் | (i) | விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 4 மீற்றர் விட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட விவசாய கிணறுகள் வணிக ரீதியான விவசாய நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் ரீதியாக நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறுகளுக்காக நீர் வளங்கள் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் குழாய் கிணறுகள் நிர்மாணிக்கின்ற சகல நிறுவனங்களும் சபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சில நிறுவனங்கள் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2017.05.16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நிலக்கீழ் நீர் நிர்மாண நடவடிக்கைகள் முறையாக பேணிச் செல்வதற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தாப்பங்களின் போது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நீர் வளங்கள் சபை சட்டத்தின் ஏற்பாடுகள் போதியளவில் காணப்படாமையினால் நீர் வளங்கள் சபைச் சட்டத்தை திருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | வணிகரீதியான விவசாயக் கைத்தொழில்களுக்காக அல்லது கைத்தொழில்களுக்காக மாதத்திற்கு 30,000 லீட்டர் நிலக்கீழ் நீரைப் பெற்றுக்கொள்ளும் சகல செயற்திட்டங்களுக்காகவு ம் உரிய நீர் மூலம் தொடர்பாக நிலைமை அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவி ல்லை. | பதவியணியினரில் வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக உரிய நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதன் மூலம் நீர் வளங்கள் முகாமைத்துவத்திற்குரிய அரசாங்கத்தின் பொறுப்பு நாடு தழுவிய ரீதியிலும் | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலையானதாகவும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. | |
| (iii) | வர்த்தமானி பத்திரத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக நீர் வளங்கள் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற அரச பொறிமுறைகளை கவனத்தில் கொண்டு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், நீர் வழங்கல் சபை, சமூக நீர் திணைக்களங்கள் போன்ற நிறுவனங்களில் தொடர்பு கொண்டு நிலக்கீழ் அடிப்படையிலான தகவல்களை சேகரித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது அந்த தரவுகள் நீர் வளங்கள் சபைக்கு பெறப்படுகின்றது. இந்த தரவுகளை பகுப்பாய்வு செய்து பயிர்ச்செய்கை கிணறுகள்,வணிக ரீதியான, விவசாய ரீதியான, கைத்தொழில் தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற குழாய் கிணறுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் குறித்த நடவடிக்கைகளை தொடர்ந்து முறையாக பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் நாளாந்தம் பெறப்பட்ட நீர் அளவுகள் தொடர்பான தரவுகள் பேணிச்செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், சில தனியார் நிறுவனங்களில் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. அது தொடர்பாக | -மேற்படி- | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம். | | | |
| i. கட்டளை இலக்கம் 2 | குழாய் கிணறுகள் நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் நீர் வளங்கள் சபையில் பதிவுசெய்ய வேண்டியிருந்ததுடன், சபையின் ஆலோசனையின் பிரகாரம் உரிய நிறுவனங்களினால் நீர் மாணி பொருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு குழாய் கிணறுகள் மூலம் நிலக் கீழ் நீரைப் பெற்றுக் கொண்ட 256 நிறுவனங்களில் நீர் மாணி பொருத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. கட்டளை இலக்கம் 3 | நீரை போத்தலில் அடைக்கும் கைத்தொழில்கள் மற்றும் குடிநீர் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற எந்தவொரு அல்லது அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லது நிறுவனம் அல்லது நபா ஒருவர் இயற்கையான நீரூற்று அல்லது நிலக்கீழ் நீரை தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உபயோகிப்பதாயின் | -மேற்படி- | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதன் நீர் மூலங்களின் நீர் மாதிரியொன்று ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒரு தடவை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு கூடமொன்றில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு உரிய பகுப்பாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக நீர் வளங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| iii. | கட்டளை இலக்கம் 5 | இயற்கையான நீரூற்று அல்லது நிலக்கீழ் நீரைப் பயன்படுத்தியோ உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களை உள்ளடக்கியதாக பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையில் பதிவு செய்திருந்த குடிநீர் போத்தலில் அடைக்கும் 22 தொழிற்சாலைகளில் 07 தொழிற்சாலைகள் மாத்திரம் பரீட்சிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரித்து அங்கீகரிக்கப்படாமல் 06 பதவிகளுக்காக 07 உத்தியோகத்தர்கள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது சேர்க்கப்பட்டிருந்ததனர். | இந்த 06 பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,059,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 41,201,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 53,260,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 80,254,000 தொகையினால் குறைவடைந்திருந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதான அலுவலக பூமியில் ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான கட்டிட திட்டமொன்றை தயாரிப்பதற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணியின் உரித்து சபைக்கு சொந்தமாக இல்லாமையின் காரணமாக அந்த ஆய்வுகூட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உரிய செலவினம் பயனற்றதாகி இருந்தது. | பிரதான அலுவலக பூமியில் ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 300,000 தொகை அந்த பணிகள் கைவிடப்பட்டமையின் காரணமாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகளுக்காக தற்போது பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது. | பயனற்ற செலவினங்கள் தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டின் போது 500 விவசாய கிணறுகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு பணியும் | இலங்கை மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கோரிக்கையின் பிரகாரம் அந்த நிறுவனத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த மஹாவலி ரம்புக்கன் ஓயா வலயத்தின் (அம்பாறை மாவட்டத்தில்) விவசாய | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் உலர் வலயத்தில் தொடர்ச்சியாக பயிர் செய்வதற்காக மற்றும் விஷேட விவசாய வலயமொன்றை ஏற்படுத்துவதற்காக விவசாய கிணறுகளை நிர்மாணிக்கும் செயற்திட்ட முன்மொழிவொன்று நீர் வளங்கள் சபையின் மூலம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்ட முன்மொழிவை பூர்த்தி செய்யும் நோக்கில் சபையில் 2020 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டு விவசாய கிணறுகளை நிர்மாணிப்பதற்கு 500 நிலக்கீழ் நீர் ஆய்வு மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டில் மஹாவலி அதிகார சபையின் இந்த செயற்திட்டத்திற்கு உரிய நிதிஏற்பாடு சபைக்கு வழங்கப்படாமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | நீர் வளங்கள் சபையினால் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படுகின்ற இரத்மலானை வேலைத்தளம் மற்றும் களஞ்சியம் அமைந்துள்ள காணி, அநுராதபுரம் சுற்றுலா விடுதி மற்றும் வவுனியா பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி என்பவற்றை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரத்மலானை வேலைத்தளம் மற்றும் களஞ்சியம் அமைந்துள்ள காணி நீர்ப்பாசன திணைக்களத்தினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டள்ளது. வீடமைப்பு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் | சபை பயன்படுத்துகின்ற வெளி நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன், சபைக்கு மாற்று காணியொன்றை வழங்குவதற்க இணங்கப்பட்டுள்ளது. அநுராதபுர சுற்றுலா விடுதி நீண்ட கால வாடகை அடிப்படையில் 30 வருட காலத்திற்கு சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. பிரதேச அலுவலகமொன்றாக வவுனியா காணியில் கட்டிடமொன்று நடாத்திச் செல்லப்படாதிருந்ததுடன், வவுனியா பிரதேசத்தில் குழாய் கிணறுகள் தோன்றும் நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களின் போது பதவியணியினருக்காக தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக தற்காலிக கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது. | |
| (இ) | 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட பெயரளவு வாடகையை அறவிடும் அடிப்படையில் 30 வருட கால எல்லையில் நீர் வளங்கள் சபைக்கு வழங்குவதற்கு கொள்கைரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தது. பிரதான மதிப்பீட்டாளரால் 2020 ஒக்டோபர் 20 ஆம் | சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணியும் அரசுக்கு சொந்தமானதாகும். அதற்குப் பதிலாக பத்தரமுல்லையில் டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி வருடாந்த பெயரளவு நில வாடகையின் அடிப்படையில் 30 வருட வாடகை அடிப்படையின் கீழ் சபைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதான மதிப்பீட்டாளருக்கு | சபை வெளித் தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்யும் போது ஆகக் கூடிய நலன்களை பெறும் வகையில் அது மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி அந்த காணிக்காக வருடாந்த வாடகை ரூபா 2,700,000 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனத்தினால் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பெயரளவு வாடகையான வருடாந்த வாடகைக்கு குறைவான பெறுமதியொன்றை செலுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்பட்ட போதும் வருடாந்த வாடகைப் பெறுமதியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அறிவித்ததன் பின்னர், உரிய வருடாந்த நில வாடகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | நெதர்லாந்தில் விஷேட கடன் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட நிலக்கீழ் நீர் ஆய்வு செயற்திட்டத்தின் கீழ் மத்திய தரவு நிலைமொன்றை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையினால் 2016 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பத்தமுல்லையில் அமைந்துள்ள காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக காணியினை வாடகைக்கு பெறுவதற்கு உரிய வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் தாமதமடைந்திருந்ததன் காரணமாக செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | உரிய பத்தரமுல்லையின் காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் பல தடவைகள் கலந்துரையாடுவதற்கு ஏற்பட்டமையினால் கணிசமான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. பின்னர் விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் முன்னின்று காணிக்காக செலுத்த வேண்டிய வாடகை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வந்திருந்ததுடன், இந்த காணியில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கும் காலம் எடுத்திருந்தது. தற்போது ஆரம்ப வேலை நடவடிக்கைகள் பூர்த்தி அடைந்திருந்தமையினால் அமைச்சரவை உப குழு அங்கீகாரம் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது, கொவிட் 19 தொற்று | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சபைக்கு ஆகக்கூடிய நலன்களைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமல் உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்ட (Trunkey contract) பிரகாரம் செலுத்துவதற்கு ஏற்பட்டமையின் காரணமாக ஆய்வுகூடத்தை நிர்மாணிக்கும் செலவினமாக இணங்கப்பட்ட ரூபா 95 மில்லியன் தொகையையும் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமல் கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பட்டமை ஆபத்தானதாக எழுந்திருந்தது. | நோய் நிலைமையின் அடிப்படையில் வெளிநாட்டு முகவர் நிறுவன உத்தியோகத்தர்கள் இலங்கைக்கு வருகை தரலில் தாமதமும் ஏற்பட்டமை இந்த நடவடிக்கைகளுக்கு தாக்கமளித்தருந்தது. | |
| (உ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 1,010,809 தொகையான இருப்பில் ரூபா 770,060 தொகையான இருப்புக்கள் அகற்றப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 1,010,809 பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ள விநியோகிக்கப்படாமல் காணப்படுகின்ற எஞ்சிய இருப்புக்களை கவனத்தில் கொள்ளும் போது இயந்திர பொறிமுறை உபகரணங்கள் உதிரிப் பாகங்களில் ரூபா 394,088 தொகையான இருப்பை அகற்றுவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள் சந்தையில் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமையினால் களஞ்சியத்தில் வைப்பதற்கு ஏற்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக எஞ்சியுள்ள காகிதாதிகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் நிலக்கீழ் நீர் ஆய்வு இருப்புக்களில் அகற்றக் கூடிய பொருட்களை இனங்கண்டு அதன் பிரகாரம் மிகுதி | விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் நீண்ட காலம் முதல் காணப்படுகின்ற இருப்புக்களை இனங்கண்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஊ) | பளை அலுவலக கட்டிடத்தில் காணப்பட்ட ரூபா 118,000 பெறுமதியுடைய பொருட்கள் காணாமல் போயிருந்தமை 2018 ஒக்டோபர் 16 ஆம் திகதி இனங்காணப்பட்டிருந்தது. அதற்குரிய பரிசோதனை இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை கோரியிருந்த மேலதிக தகவல்கள் அடுத்த பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணாமல் போயிருந்த பொருட்களுக்கு உரிய முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கோ அல்லது தேவையான நடவடிக்கைகளோ எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான அல்லுலோக பகுப்பாய்வு மற்றும் நிலக்கீழ் நீரில் விவசாய இரசாயன பரிசோதனைக்கான உபகரணங்கள் காணப்படாமை மற்றும் வடமத்திய வலயத்தில் காணப்பட்ட இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக பிரச்சினைகளுக்காக நீரில் விரிவான பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தினால் ரூபா 13,261,884 தொகை செலவில் ஆய்வுகூடமொன்று நிர்மாணிக்கப்பட்டு அதற்கு ரூபா 95,095,235 தொகையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. அந்த | GC-MS/ms உபகரணங்களை உள்ளடக்கிய ஏனைய உயர் தொழில்நுட்ப உபகரணங்களுக்காக 2019 சனவரி, 2019 யூலையில் பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அது வரையில் இந்த உபகரணங்கள் செயற்பாட்டில் காணப்பட்டது. இந்த உபகரணத்தை வழங்கிய நிறுவனத்தினால் 2020 திசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த சேவையில் அந்த உபகரணத்தில் ஏதோ ஒரு பகுதியில் சிக்கல் நிலைமை ஏற்பட்டிருந்ததாக அவர்களின் சேவை அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த | சொத்துக்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களில் நிலக்கீழ் நீரில் விவசாய இரசாயனம் அடங்கியிருந்ததா என்பதை பகுப்பாய்வு செய்வதற்காக ரூபா 32,555,430 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட GC - MS/ms உபகரணம் வழங்கப்பட்ட திகதி முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. உத்தரவாத காலத்தில் வழங்கிய கம்பனிக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டு தீர்வொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காணப்பதற்காக எந்தவொரு பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | து. அது தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அனுப்பவதன் ஊடாக அந்த உபகரணங்களின் வழுக்களை திருத்தி அமைப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் தேவையாக இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தற்போது அந்த உபகரணத்தில் வழுக்களுடன் உள்ள பகுதி தொடர்பான பகுப்பாய்வு நடவடிக்கைகள் தவிர ஏனைய விவசாய இரசாயன தொகுதி பகுப்பாய்வினை செய்தல் அந்த உபகரணம் ஊடாக மேற்கொள்ள முடியுமாக இருந்தமை அந்த உபகரணங்கள் வழங்கிய நிறுவனத்தினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த உபகரணத்தில் அந்த பகுதியில் உள்ள வழுக்களை பழுதுபார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் மூலம் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் பகுப்பாய்வாளர் பதவியினைச் சேர்த்ததன் பின்னர் உபகரணத்தின் பகுப்பாய்வு நடவடிக்கைகளில் முடியுமான தொகுதிகளில் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஆய்வுகூட உபகரணங்களை பயன்படுத்தல் தொடர்பாக | ஆய்வுகூடத்தில் பதவியணியினரின் | சொத்துக்களை செயற்திறனாகவும், |

சபையில் 10 உத்தியோகத்தர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்ட போதிலும், இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர். ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளக்கூடிய பரிசோதனைகளில் இயற்கையான மற்றும் ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த இயலளவுகள் எதிர்வு கூறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆய்வுகூடம் மூலம் வழங்கப்படுகின்ற ஆய்வுகூட வசதிகள் தொடர்பாக தெளிவுபடுத்துவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கடந்த 18 மாத காலத்தில் நிலக்கீழ் நீரில் 950 உலோக பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பற்றாக்குறையின் அடிப்படையில் தேவையான பகுப்பாய்வு நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல் கஷ்டமான நிலைமையின் அடிப்படையில் உபகரணங்களில் இருந்து ஆகக் கூடிய இயலளவின் கீழ் பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், செயற்திட்டம் மற்றும் வணிக ரீதியான பகுப்பாய்வு நடவடிக்கைகள் இயலுமான வகையில் ஆகக்கூடிய முறையில் காணப்படுகின்ற ஆய்வுகூட பதவியணியினர் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. நீர் பகுப்பாய்வாளர் பதவிக்காக ஆட்சேர்த்ததன் பின்னர் இந்த நடவடிக்கைகளை மிகவும் செயற்திறனாக மேற்கொள்ள முடியும். இந்த ஆய்வுகூடம் வடமத்திய மாகாணத்தில் SLAB தரத்தின் கீழ் உள்ள ஆய்வுகூடமாக ஸ்தாபிக்கும் செயற்பாடு ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் வடமத்திய மாகாணத்தில் ஆய்வுகூட பதவியணியினரின் (Skill Development) பயிற்சி அமர்வு மற்றும் செயலமர்வு இந்த ஆய்வுகூடத்திலும் கேந்திரமிட்டு மேற்கொள்வதன் மூலம் இந்த ஆய்வுகூடம் தொடர்பாக உரிய தரப்பினருக்கு

வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

## 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 30 வாகனங்களுக்காக வாகனங்கள் காணப்படுகின்ற நிலையங்ளை இனங்காணும் பொறிமுறைகளை வழங்கி பொருத்துதல். (Supplying & Installation of vehicle tracking Solution ) இற்காக ரூபா 1,419,000 பெறுமதியில் 2019 செப்டம்பர் 18 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை பணம் எதுவும் செலுத்தப்படாதிருந்ததுடன், உரிய உபகரணங்களை பொருத்திய நிறுவனம் எங்களினால் கோரப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையினால் பொருத்தப்பட்ட துணைப்பாகங்களை அகற்றுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான பணிகளை ஒப்பந்தகாரர் மூலம் நிறைவேற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நால்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடு சபையின் நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட செலவின எல்லையினை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி அவ்வாறு செலவிடப்பட்டுள்ள எல்லையினை விஞ்சிய செலவினங்களைச் செய்தல் 16 சதவீதம் முதல் 840 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | ஒட்டுமொத்தமாக எடுக்கும் போது நிர்வாக கிரயம், வழங்கல் நுகர்வுகள், ஏனைய செயற்பாட்டு செலவினங்களில் கட்டுப்பாடொன்று காணப்பட்டது. ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவினங்களில் அதிகரிப்பொன்று காணப்படுவது கட்டிட வாடகை செலவினங்களில் மதிப்பீட்டு அறிவித்தல் | பாதீடு செய்யப்பட்ட செலவின மதிப்பீட்டு எல்லையை விஞ்சி நடவடிக்கை எடுக்க முடியாது. |

தாமதமாக கிடைத்தமையின் காரணமாகும். எவ்வாறாயினும் இயலுமானவரை மேலும் செலவினங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.